FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS

BNSS பிரிவு 173-இன் கீழ்

C 8167248

06/AC/2026

1. District : மாவட்டம் கரூர் PS: கா.த.க.பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 05.08.2026

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 AS AMENDED IN 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.08.2026 Date to : நாள் வரை காலை 11.30 மணி மற்றும்

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை மதியம் 01.30 மணி.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.08.2026 Time : நேரம் 07.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.08.2026 Time : நேரம் 07.45 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40.கி.மீ தெற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், ராகவபுரம் கிராமம், அரவக்குறிச்சி வட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கு. விஜிலன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோபாலி.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 2004 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கொத்தனார் மேஸ்திரி (g) Address : முகவரி க.எண்: 02/107, அக்ரஹாரம் (மே) அஞ்சூர், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. அன்புராஜ், கிராம நிர்வாக அலுவலர், ராகவபுரம் கிராமம், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாள்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
G. VIGILAN 5/8/2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
5/8/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.08.2026 AT 10.30 HRS.

Name: பெயர் K. சாமிதுரை
Rank: நிலை தலைமைக் காவலர் No. எண் .....
உ.த.க.பாண்டி. 6087

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.06/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 05.08.2026 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது G.விபிலன், த/பெ.கோபால், 2/107, அக்ரஹாரம், ராஜாபுரம் கிராமம் (ம) அஞ்சல், அரவக்குறிச்சி தாலுகா, கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் - G.விபிலன், த/பெ.கோபால், 2/107, அக்ரஹாரம், ராஜபுரம் கிராமம் (ம) அஞ்சல், அரவக்குறிச்சி தாலுகா, கரூர் மாவட்டம். பெறுநர் - காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கரூர். ஐயா, நான் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், ராஜபுரம் கிராமம், அக்ரஹாரத்தில் எனது அம்மாவுடன் வசித்து வருகிறேன். நான் தனியார் கோழி பண்ணையில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். எனது அம்மாவிற்கு பூர்விகம் நாமக்கல் மாவட்டம் பரமத்தி தாலூக்கா கொந்தளம் கிராமம் ஆகும். எனது அம்மாவுக்கு சிவக்குமார் மற்றும் ரமேஷ் என்ற இரண்டு சகோதரர்கள் உள்ளனர். அவர்கள் இருவருக்கும் கொந்தளம் கிராமத்தில் எனது தாத்தா பெயரில் இருந்த 1 ஏக்கர் விவசாய நிலத்தை சுமார் 10 வருடத்திற்கு முன்பே கொடுத்து அந்த நிலத்தை அவர்கள் இருவரும் சரிபாதியாக பிரித்து கொண்டார்கள். அதனால் எனது அம்மாயின் அம்மா பெரமாயி அவர்களின் பெயரில் அரவக்குறிச்சி ராஜபுரம் கிராமத்தில் இருந்த சுமார் 32 சென்ட் விவசாய நிலத்தை எனது அம்மாவின் பெயருக்கு மாற்றுவதற்கு வாரிசு சான்றிதழ் தேவைபட்டது. அதனால் நான் கடந்த 01.08.2026ந் தேதி எனது அம்மாவுடன் பரமத்தி கொந்தளம் அருகேயுள்ள இ-சேவை மையத்திற்கு சென்று ஆன்லைன் மூலமாக ரூ.60/- விண்ணப்ப கட்டணம் செலுத்தி எனது அம்மா பெயரில் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்ப எண் TN7202608011650 ஆகும். எனது அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாததால் வாரிசு சான்று விண்ணப்பத்தின் நிலையை அறிய நான் 04.08.2026 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு ராஜபுரம் கிராம நிர்வாக அலுவலர் அன்புராஜ் அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து எனது அம்மாவின் வாரிசு சான்று பற்றி கேட்டபோது அவர் என்னிடம் உங்க தாத்தா பாட்டி எல்லோரும் இறந்து விட்டார்கள் அதை பற்றி விசாரித்து அறிக்கை தயார் செய்து விண்ணப்பத்தை ஆன்லைன் மூலம் பரிந்துரை செய்து அனுப்ப நிறைய அலுவலக செலவு இருக்கிறது. அதனால் ரூ.1500/- கொடுத்தால் தான் வாரிசு.சான்று விண்ணப்பத்தை பரிந்துரை செய்து வருவாய் ஆய்வாளர் மூலம் வட்டாட்சியருக்கு அனுப்பி விடுவதாகவும் இல்லையென்றால் வாரிசு சான்று விண்ணப்பத்தினை நிராகரித்து விடுவதாகவும் பணம் ரூ.1500/- உடனே கொடுக்கும்படி என்னிடம் கேட்டார். அதற்கு நான்

கூலி வேலை தான் செய்து வருகிறேன் என்றும் மிகுந்த சிரமத்தில் இருக்கிறேன் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்றும் அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் வாரிசு சான்று கிடைக்காது பணத்தை ரெடி பண்ணிக்கொண்டு சீக்கிரமா வா என்று சொன்னார். நான் வீட்டிற்கு வந்து விட்டேன். விஏஓ திரு.அன்புராஜ் கேட்ட பணத்தை என்னால் புரட்ட முடியவில்லை. சட்டப்படி செய்ய வேண்டிய வேலைக்கு விஏஓ லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று மனது மிகவும் வேதனையாக இருந்தது. அதன் பிறகு நான் நேற்று மதியம் சுமார் 1.30 மணிக்கு ராஜபுரம் விஏஓ அலுவலகத்திற்கு சென்று விஏஓ திரு.அன்புராஜ் அவர்களை மீண்டும் சந்தித்து என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியவில்லை என்றும் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து அனுப்பும்படி கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் வேலை ஆகாது வேண்டுமானால் 500 ரூபாய் குறைத்து கொண்டு 1000 ரூபாய் கண்டிப்பாக ரெடி பண்ணிகொண்டு நாளை காலை அவரது அலுவலகத்திற்கு வந்து கொடுக்கும்படியும் இல்லையென்றால் இப்படியே அலைந்து கொண்டே தான் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாக சொல்லி விட்டார். எனக்கு ராஜபுரம் விஏஓ திரு.அன்புராஜ் அவர்களுக்கு 1000 ரூபாய் லஞ்சமாக கொடுத்து எனது தாயாரின் பெயரில் வாரிசு சான்று பெற விருப்பம் இல்லை. இத்துடன் ஆன்லைன் மூலமாக அம்மாவின் பெயரில் விண்ணப்பித்த உறுதிமொழி நகலை இணைத்து உள்ளேன். எனவே வாரிசு சான்றுக்கு லஞ்சம் கேட்ட ராஜபுரம் விஏஓ மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (G.விபிலன்) 5.8.2026.

Sir, Received the Computer typed complaint on 05.08.2026 at about 07.00 hrs,. A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.06/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 07.45 hrs on 05.08.2026. Sd/-(xxxxxxxx) 05.08.2026. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.G.Vibilan S/o.Gopal, 2/107 Agraharam, Rajapuram Village & Post, Aravakurichi Taluk, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

5/8/26

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.